Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 731/2024 |
| Police station | : | நெல்லிக்குப்பம் |
| Deposition of witness for Prosecution | : | LW 5 / PW3 |
| Name | : | திரு. பிரேம்குமார் உதவி ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 19.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கடலூர் முது நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 28.03.2022ம் தேதி நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 7.15 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி காராமணிக்குப்பம் கருவாடு சந்தைக்கு பின் புறம் ஒரு நபர் கஞ்சா விற்பதாக கிடைத்த ரகசிய தகவலின் படி அங்கு சென்று கண்காணித்தபோது ஒரு நபர் கையில் பாலிதின் கவரில் எதையோ மறைத்துவைத்துக்கொண்டு எங்களை கண்டதும் ஓட எத்தறித்தவரை நான் பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் விலாசத்தை விக்கி என்கிற விக்னேஷ் வயது–28 த/பெ மதியழகன், மாரியம்மன்கோவில் தெரு,

காராமணிக்குப்பம் என்று கூறினார். அவரிடம் எனது அடையாள அட்டையை காண்பித்து நான் நெல்லிக்குப்பம் உதவி ஆய்வாளர் என்றும் என்னுடன் வந்தவர்கள் என்னுடன் பணி புரியும் காவலர்கள் என்றும் எங்கள் அறிமுகம் செய்து கொண்டு நீர் கஞ்சா விற்பதாக எனக்கு தகவல் கிடைத்தது என்று கூறி அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவரிடம் 50 கிராம் கஞ்சா இருந்ததை காரணம் கூறி 7.25 மணிக்கு கைது செய்து அந்த நேரத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் முதல் நிலை காவலர் 1374 திரு. ராஜசேகர் மற்றும் முதல் நிலை காவலர் 742 திரு. அருண் ஆகியோர்கள் முன்னிலையில் காலை 7.35 மணிக்கு ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். 8.15 மணிக்கு நெல்லிக்குப்பம் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 305/2022ல் சட்டப் பிரிவுகள் 20(b)(ii)(A) NDPS Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டு கைப்பற்றப்பட்ட கஞ்சாவை விழுப்புரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பி 25.04.2023 அன்று முதல் நிலை காவலர் திரு. ராமதாஸ் அவர்கள் மூலம் அறிக்கை பெறப்பட்டு தடய அறிவியல் ஆய்வாளர் உதவி இயக்குநர் திருமதி. ரோஸ்மேரி அவர்களை விசாரணை செய்து ஆய்வறிக்கை பெற்றேன். **மேற்படி ஆய்வறிக்கை அ.சா–ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

28.03.2022 திங்கள் கிழமை என்றால் சரிதான். காராமணிக்குப்பம் கிராமத்தில் வாரா வாரம் திங்கள் கிழமைகளில் சந்தை கூடுவது வழக்கம் என்றால் சரிதான். சந்தையில் விடியற்காலையில் 4 மணியில் இருந்து காய் கறி மற்றும் கருவாடு கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அந்த சந்தைக்கு பொருட்கள்

வாங்குவதற்கு மக்கள் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். எதிரி கருவாடு சந்தைக்கு பின் புறம் நின்று கொண்டிருந்ததாக சொல்லப்படும் நிலையில் எந்த இடத்தில் எந்த திசையை நோக்கி நின்று கொண்டிருந்தார் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை. எதிரி ஓட முயன்றார் என்று சொல்லியுள்ள நிலையில் எந்த திசையை நோக்கி ஓடினார் எங்கு வளைத்த பிடித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி கையில் பாலிதின் கவர் வைத்திருந்தார் என்று சொல்லியுள்ள நிலையில் அது என்ன நிறம் என்ன வகை என்று கைப்பற்றுதல் மகசர் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி கையில் 50 கிராம் கஞ்சா தான் வைத்திருந்தார் என்று எதன் அடிப்படையில் முடிவு செய்தேன் என்றால் எப்போதும் நாங்கள் கையில் தராசு எடுத்துக்கொண்டு செல்வோம். அதில் எடைபோட்டு தெரிந்துகொண்டோம். மேற்படி விபரத்தை எனது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக போதைப்பொருள் சம்பந்தமாக எந்த ஒரு நபரையும் கைது செய்தால் எனது உயர் அதிகாரிக்கு தகவல் சொல்வது வழக்கம் என்றால் சரியல்ல. அதுபோல் சம்பவ இடத்தில் எதிரியை கைப்பற்றிய போதைப்பொருட்கள் புகைப்படம் எடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அதுபோல் இந்த வழக்கில் எந்தவொரு புகைப்படமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறுதியறிக்கையில் காலம் 10ல் கைப்பற்றப்பட்டதாக சொல்லும் கஞ்சா 20 கிராம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியை கைது செய்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் அவரது வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரியை கைது செய்த உடனே அவர் வீட்டில் தகவல் தெரிவித்தோமா என்றால் தெரிவித்தோம். சந்தைக்கு வந்த தனி நபர் சாட்சிகளை விசாரித்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரி எந்தவொரு குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும்

எதிரியிடமிருந்த எந்த பொரும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரியைசொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரித்து எதிரிக்கு எதிராக ஒரு பொய்யான வழக்கு தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்சரியல்ல.